**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C.258/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.2 |
| Name | : | குருசீலன் |
| Father's /Husband Name | : | குமார் |
| Village | : | வலங்கைமான் |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 34 |
| Occupation | : | இரண்டாம் நிலை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 12th day of May 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.10.2024 ம் தேதி அன்று மாலை 16.30 மணிக்கு நான் குடவாசல் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது காவல் உதவி ஆய்வாளர் திரு. கோபிநாத் என்பவருடன் நானும் முதல் நிலைக் காவலர் திரு.சிவானந்தம் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணித்து வந்த போது குடவாசல் சரகம் தீபங்குடி ஆற்றுபாலம் அருகே நின்று கொண்டிந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் ராஜேந்திரன் மகன் சந்தோஷ் என்று கூறினார். மேலும் மேற்படி நபர் நின்று கொண்டிருந்த இடத்தை காவலர் உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது சுமார் 180 மி.லி. பிடிக்கக்கூடிய தமிழ்நாடு அரசு டாஸ்மாக் மதுபானம் Green leaf brandy பாட்டில்கள் 8 இருந்தது. அதை மேற்படி உதவி ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்த போது அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லை என்று கூறினார். பின்னர் எதிரியை குற்றம் காரணம் கூறி காலை 16.45 அளவில் அதே இடத்தில் கைது செய்தார். பின்னர் மேற்படி எதிரி வைத்திருந்த தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் 17.15 மணியளவில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், மேற்படி உதவி ஆய்வாளருடன் சென்ற நானும் முதல் நிலைக் காவலர் சிவானந்தம் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும்

கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்பு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை 17.15 மணியளவில் சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்து அழிப்பு மகசர் மேற்படி உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதிலும் நானும் முதல் நிலைக் காவலர் சிவானந்தம் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அழிப்பு மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 398/2024 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ஆய்வாளர் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித பணத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும் தாமாக முன்வந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றாலும் சரியல்ல. தமிழ்நாடு மதுபான பாட்டில்களை கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து காவல் உதவி ஆய்வாளர் கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், ஆய்வாளர் போடப்பட்ட பொய்வழக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.12 10:36:05 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.